දේශීය ආදායම් දෙපාර්තමේන්තුව

உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

Inland Revenue Department

# வரி செலுத்துநர்களுக்கு விடுக்கப்படும் அறிவித்தல்

## வரி வதிவுச் சான்றிதழ் (TRC) பெற்றுக்கொள்ளும் முறைகள்

வரி வதிவுச் சான்றிதழுக்கு (TRC) விண்ணப்பிக்கும்போது பின்பற்ற வேண்டிய முறையான வழிமுறைகள் குறித்து, அனைத்து வரி செலுத்துநருக்கும் (தனிநபர்கள், கம்பனிகள், மற்றும் பங்குடமை வியாபாரம்) இற்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது. இரட்டை வரி தவிர்ப்பு ஒப்பந்தங்களின் (Double Taxation Avoidance Agreements – DTAA) கீழ் உரித்தகும் பயன்களைப் பெறுவதற்கு இந்தச் சான்றிதழ் அத்திய அவசியமாகும்.

### 1.வரி வதிவுச் சான்றிதழிற்காக விண்ணப்பிகப்பதற்கான காரணங்கள்

நீங்கள் வெளிநாட்டில் / நிருவாக அதிகார எல்லைப் பிதேசத்தில் வருமானம் ஈட்டும் பட்சத்தில், அந்த நாட்டில் வரி செலுத்த வேண்டியிருக்கலாம். இருப்பினும், இலங்கைக்கும் அந்த நாட்டுக்கும் / நிருவாக அதிகார எல்லைப் பிதேசத்திற்கும் இடையே இரட்டை வரி தவிர்ப்பு ஒப்பந்தம் (DTAA) காணப்படும் பட்சத்தில், நீங்கள் வரிச் பயன்களைப் பெற்றுக் கொள்ள உரமை கோர முடியும் .அத்தகைய வரிப் பயன்களைப் பெறுவதற்கு, நீங்கள் இலங்கையில் வரி வதிவுள்ள (Tax Resident) என்பதற்கான ஆதாரமாக, வரி வதிவுச் சான்றிதழ் (TRC) வெளிநாட்டு வரிப் பொறுப்பளாருக்கு சமர்பிக்க முடியும். தங்களுக்கு இரட்டை வரி விதிப்பு ஒப்பந்தங்களின் பட்டியலிற்கு கீழ் குறிப்பிடப்பட்டஇணைப்பின் ஊடாக முடியும்.
https://www.ird.gov.lk/en/publications/sitepages/International%20Relations.aspx?menuid=1401

### 2.வரி வரவுச் சான்றழைப் பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பிக்க முடியுமானவாகள்.

இரட்டை வரி விதிப்பு ஒப்பந்தங்களின் கீழ் வரிச் பயன்களைப் பெறுவதற்காகவோ அல்லது வேறு நாடுகளின் வரி தொடர்பான தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவோ இலங்கையிடமிருந்து வரிச் வதிவுச் சான்றிதழை (TRC) பெற வேண்டிய எந்தவொரு வதிவுள்ள வரி செலுத்துநருக்கும் இதற்காக விண்ணப்பிக்க முடியும்.



### 3.வரி வசிப்பிடச் சான்றிதழுக்கு விண்ணப்பித்தல்

வரி வதிவுச் சான்றிதழை (TRC) பெறுவதற்கான விண்ணப்ப்டிவத்தை, உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் வெளியிடப்ப்டவுள்ள படிவத்தினை பயன்படுத்தி சமர்ப்பிக்க வேண்டும். சம்பந்தப்பட்ட விண்ணப்பப் படிவம், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் உத்தயோகேபூர்வ இணையதளமான https://www.ird.gov.lk/en/Downloads/SitePages/Forms.aspx?menuid=1603 ஊடாக பெற்றுக் கொள்ள முடியும். .

அவ்விண்ணப்பப்படிவத்தில் வழங்கப்பட்டுள்ள அனைத்துத் தகவல்களும் முழுமையானதாகவும் சரியாக வழங்குவதற்கும் தேவையான சந்தர்பங்களில் தொடர்புடைய ஆவணங்கள் மூலம் அதனை உறுதி செய்துகொள்வதற்கும், விண்ணப்பதாரியினால் பெறுப்பாக செயற்பட வேண்டும்.

### 4.விண்ணப்படிவத்தினை சமர்பிக்கும் செயற்பாடுகள்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தையும் தேவையான உறுதிப்படுத்தல் ஆவணங்களையும் கீழ்க்காணும் பிரிவில் இலத்திணியல் முறையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். :

- **சர்வதேச வரி விவகாரப் பிரிவு**
- **இலத்திரணியல் மின் அன்ஞல் : itp@ird.gov.lk**

விண்ணப்பதாரரின் வரி வதிவு நிலையைத் தீர்மானிப்பதற்காக மேலதிக தகவல்கள் அல்லது ஆவணங்கள் அவசியமெனக் கருதப்படும் சந்தர்பத்தில், திணைக்களத்தினால் அத்தகைய தகவல்களைச் சமர்ப்பிக்குமாறு கோர முடியும்.

### 5.தேவையான தகவல்கள் மற்றும் ஆவணங்கள்

- விண்ணப்பப்படிவம்
- முன்னைய அறிக்கை: இதற்கு முன்னர் வெளியிட்டுள்ள வதிவுச் சான்றிதழ் (TRC) ஸ்கான் செய்யப்பட்ட பிரதி (தொடர்புடையதாயின்)
- வெளிநாட்டு வரிப் பொறுப்பாளர் / கொடுப்பனவாளரிடமிருந்து கிடைத்த கோரிக்கை (தொடர்புடையதாயின்)
- கூட்டிணைவு அல்லது வியாபார பதிவுச் சான்றிழ்.
- விண்ப்பதாரியிற்காக முகவரினால் ஆரம்ப வரி வதிவுச் சான்றிதழ் (TRC) பெறுவதாயின்,அதிகாரத்தினை வழங்கிய கடிதத்தினைசமர்பிக்க வேண்டும்.

**தனியாள் விண்ணப்பதாரிகளுக்காக (மேலதிக தேவைகள்) :**

- தேசிய அடையாள அட்டையின் பிரதி
- வெளிநாட்டு கடவுச்சீட்டின் உயிரியல் புள்ளிவிவரம்கொண்ட பக்கத்தின், அனைத்து விசா பக்கங்கள் மற்றும் இலங்கைக்கு வருகை / இலங்கையில் இருந்து புறப்படும் முத்திரை பதிக்கப்பட்ட அனைத்துப் பக்கங்களின் ஸ்கேன் செய்யப்பட்ட பிரதிகள். (குறிப்பு: கோப்பின் அளவு 10MB க்கு மேல் இருந்தால், அதை இரண்டு மின்னஞ்சல் தகவல்களாக பிரிக்கவும்.)
- விண்ணப்பப்படிவம் சமர்பிக்க முடியுமான தடவைகளின் எண்ணிக்கை மற்றும் உரிய திகதி விண்ணப்பத்தைச் சமர்ப்பிப்பதற்காக குறிப்பிட்ட குறிப்பிட்ட இறுதித் திகதி எதுவும் இல்லை. வரி செலுத்துநரின் தேவைக்கேற்ப விண்ணப்பப் படிவங்களை சமர்பிக்க முடியும். இருப்பினும், வரி வதிவுச் சான்றிதழ் (TRC) வழங்கப்பட்ட திகதியிலிருந்து 12 மாத காலத்திற்காக மாத்திரமாகும்.

### 6.விண்ணப்பப்படிவம் சமர்பிப்பதற்கு முன்னர் பூர்த்திசெய்யப்படவேண்டிய தேவைகள்.

விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்க முன்னர், வரி செலுத்துநரினால் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வருமான நிருவாக முகாமைத்துவ தகவல் முறமையில் (RAMIS) பராமரிக்கப்படும் தகவல்கள் இற்றைப்படுத்தப்பட்ட நிலையில் மற்றும் சரியாக உள்ளதை உறுதி செய்துகொள்ள வேண்டும்.

விஷேடமாக, வரி செலுத்துநரினால் கீழ் குறிப்பிடப்பட்டவிடயங்கள் உறுதிப்படுத்தப்பட வேண்டும். :

1. தற்போதைய வதிவு முகவரி அல்லது வதிவு முகவரி இற்றைப்படத்தப்பட்டு இருத்தல்.;
2. தொடர்புடைய சந்தர்பங்களில், வியாபார செயற்படுகளின் தன்மையினை சரியாக குறிப்பிடப்பட்டு இருத்தல். ;
3. வரிசெலுத்துநரைஅடையாளம் கானும் (TIN இலக்கம் மற்றும் வரிசெலுத்துநரின் பக்கத்தோற்ற தகவல்கள் சரியாக குறிப்பிட்டு இருத்தல். மற்றும்

4தொடர்படைய அனைத்து வரி விபரத்திரட்டுக்கள், வெளியீடுகள் மற்றும் கொடுப்பனவு சமர்பிப்புக்கள் உரியவாறு மேற்கொள்ளப்பட்டுஇருத்தல்.